**விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம்,**
**சின்னபாபுசமுத்திரம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை திருமதி. தனம் அருளரசன் ஊராட்சி மன்ற தலைவர், சின்னபாபுசமுத்திரம் ஊராட்சி**

தீர்மானம் எண்: 24 நாள்: 5.7.2024

**பொருள்:**

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு – விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம் வட்டம் - கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம் - சின்னபாபுசமுத்திரம் ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்: 71/9A2ல் 0.73 ஏக்கர் (2950 ச.மீ) – பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள **"ஞானாம்பாள் நகர் விரிவாக்கம்"** குடியிருப்பு மனைப்பிரிவுக்கான சின்னபாபுசமுத்திரம் ஊராட்சியின் தொழில்நுட்ப இறுதி ஒப்புதல் - வழங்குதல் குறித்து.

**பார்வை:**

1) மனுதாரர் திருமதி.கெஜலட்சுமி, பண்ணக்குப்பம், திரு.R.அங்கமுத்து (எ) முத்து, வில்லியனூர், திரு.M.சக்திவேல், வில்லியனூர் அவர்களின் விண்ணப்பம் நாள்: 03.07.2024.
2) அரசாணை எண்: 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 04.05.2017.
3) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மாவட்டம், அவர்களின் "ஞானாம்பாள் நகர் விரிவாக்கம்" குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல், இணையதள எண்: ROC No: LD9675Y4 / 2024 / TCP நாள்: 31.05.2024.
4) சார் பதிவாளர் பதிவுத்துறை - சார் பாதிவாளர் அலுவலகம் கண்டமங்கலம் தான ஆவண எண்: 1030/2024 நாள்: 22.05.2024.
5) கூறாய்வு கட்டணம் செலுத்து ரசீது Indian Bank, A/C No: 7392525861, தொகை ரூ. 17,000/- தேதி: 06.07.2024 மற்றும் நில மாற்று கட்டணம் சந்தை மதிப்பில் 3% SBI – E Chellan No: 20240708006562 – தொைக ரூ.12050/- தேதி: 08.07.2024.

**உத்தரவு:**

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு – விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம் வட்டம் - கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம் - சின்னபாபுசமுத்திரம் ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்கள்: 71/9A2ல் 0.73 ஏக்கர் (2950 ச.மீ) – பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள **"ஞானாம்பாள் நகர் விரிவாக்கம்"** குடியிருப்பு மனைப்பிரிவு பார்வை (1) & (3)-ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்ட பார்வை (2) & (3)-ல் சுட்டியபடி மனைப்பிரிவு சாலை மற்றும் அமைப்பு வரைப்படம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை (4) ல் சுட்டியபடி பூங்கா, சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானபத்திர ஆவண எண்: 1030 / 2024 நாள்:22.05.2024ன் படி சின்னபாபுசமுத்திரம் ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டு தானப்பத்திரம் அசல் பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பார்வை (3)-ல் சுட்டியபடி உத்தேச மனைபிரிவுக்கு கீழ்க்கண்ட இறுதி ஒப்புதல் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனைப்பிரிவிற்கு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்தினை மேற்படி சின்னபாபுசமுத்திரம் ஊராட்சி மன்ற தீர்மான எண்: 24 நாள்: 5.7.2024 என எண்ணிப்பட்டு அசல் வரைப்படங்கள் மற்றும் ஒப்புதல் ஆணை நகல் இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

உள்ளாட்சியின் இறுதி ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை சம்மந்தப்பட்ட நகர் ஊரமைப்பு மற்றும் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு நில அளவை துறைக்கும், தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்பிவைக்கப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்:**

1) மனைப்பிரிவுகள் சாலைகள் அனைத்தும் மனைப்பிரிவு வரைபடத்தின்படி உள்ளாட்சி சட்டங்களின் படி சம்பந்தப்பட்ட ஊராட்சி அபிவிருத்திக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும் பொது துறையில் இருந்து (Public Road) மனுதாரர் மனைப்பிரிவு அமையும் இடம் வரை அணுகு சாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப்பகுதியை உள்ளாட்சி தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளும்.

2) மனைப்பிரிவு வரைபடத்தின் மனைப்பிரிவு சாலையும் OSR மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் இருப்பின் அதனையும் மனைப்பிரிவு வரைப்படம் மற்றும் தானபத்திர நகலுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய் ஆவணங்களில் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

3) நகர் ஊரமைப்பு அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் அலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.

4) மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் இந்த உத்தரவு எப்போது வேண்டுமானாலும் ரத்து செய்யப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம் வட்டம் - கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம் - சின்னபாபுசமுத்திரம் ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்: 71/9A2ல் 0.73 ஏக்கர் (2950 ச.மீ) – பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவில் உத்தேச குடியிருப்பு ஒதுக்கிய மனைகள் 17 (மனை எண்கள் 1 முதல் 17 வரை) மனைகளுக்கு "ஞானாம்பாள் நகர் விரிவாக்கம்" என்னும் பெயருடன் இந்த ஒப்புதல் வழங்கப்படுகிறது.

தலைவர்
சின்னபாபுசமுத்திரம் ஊராட்சி

**இணைப்பு:**

1) வரைபடம்
2) மனைப்பிரிவு நிபந்தனைகள்

**பெறுநர்:**

திருமதி.கெஜலட்சுமி, பண்ணக்குப்பம், விழுப்புரம் மாவட்டம் - 605102
திரு.R.அங்கமுத்து (எ) முத்து, வில்லியனூர், புதுச்சேரி – 605110.
திரு.M.சக்திவேல், வில்லியனூர், புதுச்சேரி – 605110.

**நகல்:**

1) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஊராட்சி ஒன்றியம், கண்டமங்கலம்.
2) உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், விழுப்புரம்.
3) உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, விழுப்புரம்.
4) TN RERA – எக்மோர், சென்னை.
5) சார் - பதிவாளர், கண்டமங்கலம்.